[1991 சனவரி 24

பழங்குடியினருக்குத் தனி வேலைவாய்ப்பு அலுவலகங்கள்.

*8283—திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்)

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

ஊட்டியில் உள்ளதுபோல் கொல்லிமலை, ஏற்காடு மற்றும் கொடைக்கானல் மலைகளிலும் பழங்குடியினருக்கான தனி வேலைவாய்ப்பு அலுவலகங்கள் திறக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஊட்டியில் பழங்குடியினருக்கான தனி வேலைவாய்ப்பு அலுவலகம் இல்லை. கொல்லிமலை, ஏற்காடு மற்றும் கொடைக்கானல் மலைகளிலும் பழங்குடியினருக்கான தனி வேலை வாய்ப்பு அலுவலகங்கள் திறந்து வைக்கும் செயற் குறிப்பு தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை. ஊட்டியில் இருப்பது, தொழில் நேர் சிறப்பு வழி காட்டி அலுவலகம் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் வேலை வாய்ப்பு அலுவலகம் இல்லை, ஆனால் தொழில் நேர் சிறப்பு வழிகாட்டி அலுவலகம் வழிகாட்டும் மையமாகச் செயல்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். அதைப்போன்ற மையங்கள் எந்தெந்த மாவட்டங்களில் எத்தனை இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் சங்கராபுரம் கல்ராயன் மலையிலும் இயங்கி வருகிறது. ஆக இரண்டு இடங்களில்தான் இயங்கி வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் தமிழ்நாட்டிலேயே அதிகமான பழங்குடியினர் வாழ்கிறார்கள். சேந்தமங்கலம் மற்றும் ஏற்காடு இந்த இரண்டு தொகுதிகளுமே பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட தொகுதிகள். அதுமட்டும் அல்லாமல் ஆதிதிராவிட மக்கள் நிரம்ப வாழ்கிறார்கள். மொத்தம் 5 தொகுதிகள் சேலம் மாவட்டத்தில் உள்ளடங்கி இருக்கின்றன. ஆகவே அதனைக் கருத்தில் கொண்டு தொழில் நேர் சிறப்பு வழிகாட்டி அலுவலகம் சேலம் மாவட்டத்தில் ஒன்று அமைப்பதற்கு அந்தத் துறையினர் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் கொல்லி மலையில் நிறுவுவதற்கான கருத்துக்கள் கொடுக்கப்பெற்றும்கூட நிதி நிலைப் பற்றாக்குறை காரணமாக இத்திட்டங்களுக்கு இப்போது ஒப்புதல் அளிக்கவில்லை. மேலும் சேலம் மாவட்டத்தில் ஏற்காட்டில் திறப்பதற்கு செயற்குறிப்பு ஒன்றும் பரிசீலனையில் இல்லை.

கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடுதல்.

* 11150—திரு. அ. செங்குட்டுவன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து நாகைக்கும், நாகையிலிருந்து சென்னைக்கும் கிழக்கு கடற்கரைச் சாலை வழியாக மகாபலி புரம், மரக்காணம், பாண்டி, மயிலாடுதுறை வழியாக திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகப்பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. அ. செங்குட்டுவன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முந்தைய நமது அரசு காலத்தில் கடற்கரைச் சாலைத் திட்டம் செயல்பட இருந்து, இடையிலே அது தடைப்பட்டு, தற்போது அது செயல்படும் தருவாயில் இருக்கிற இந்த நேரத்தில், நாளுக்கு நாள் விபத்துக்கள் உருவாகிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் கடற்கரையை ஒட்டிய பகுதிகள் வளர்ச்சி அடையவும், விபத்துக்களைத் தவிர்க்கவும், சென்னை-நாகை வரை கடற்கரைச் சாலைத் திட்டத்தை நம்முடைய அரசு துரிதமாகச் செயல்படுத்த முன்வருமா, அதற்கு மத்திய அரசினுடைய அனுமதி கிடைக்கும் என்று சொல்கிறார்களே கிடைத்துவிட்டதா, அது எந்த ஆண்டுக்குள் முடிவடையும் என்று அறிய விரும்புகிறேன்.

9—15 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய கருத்துக்களை மையமாக வைத்துத்தான் இந்தப் பாதை ஆசிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சுமார் 52 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கப்பட உள்ளது. அந்தத் திட்டங்கள் நிறைவேறியதற்குப் பிறகு இந்தப் பாதை வழியாக விரைவுப் பேருந்துகள் நடத்துவதற்கு அரசு முடிவு எடுக்கும்.

திரு. அ. செங்குட்டுவன் : துணைத் தலைவர் அவர்களே, தஞ்சையில் நரிமணம் போன்ற கடற்கரைப் பகுதிகளில் கச்சா எண்ணெய் கிடைத்து வருகிறது. அதைச் சென்னை வரை கொண்டு வரவேண்டியிருக்கின்ற காரணத்தால், போக்குவரத்து நெரிசல் அதிகமாக ஆகின்றது. இந்தக் கடற்கரைச் சாலை வழி ஏற்படுவதன் மூலம், மாற்று வழி ஏற்படுவதன் மூலம், தமிழகத்தில் ஒரு வளர்ச்சியும் கடற்கரைப் பகுதியில் ஒரு முன்னேற்றமும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதை அரசு துரிதமாகச் செயல்படுத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : துணைத் தலைவர் அவர்களே, வேகமாக இந்தப் பணிகள் நடைபெறுவதற்கு நிச்சயமாக நெடுஞ்சாலைத் துறையை விரைவுபடுத்த அறிவுரைகள் வழங்கப்படும்.

திரு. வ. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, சென்னையிலேயிருந்து தமிழகத்தின் தென் பகுதிகளுக்குச் செல்லக்கூடிய பெரும்பாலான திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் செங்கற்பட்டு, மதுராந்தகம், திண்டிவனம், விழுப்புரம் வழியாகச் செல்கின்றன. இதனால் பெரும்பாலும் செங்கற்பட்டுக்கு முன்பாகவே பேருந்துகள் பல மணி நேரம், நெரிசல் காரணமாக நின்று, பயணிகளுக்கு இடைஞ்சல் தருவதோடு அதிகமான விபத்துக்கள் நிகழ்கின்றன. ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறேன். எனவே அதிலே சில பேருந்துகளை, விபத்துக்களை தவிர்க்கும்பொருட்டு காஞ்சிபுரம், செய்யாறு, வந்தவாசி வழியாகவோ அல்லது காஞ்சிபுரம், செய்யாறு, ஆரணி வழியாகவோ மாற்றிக் கொடுத்தால் விபத்துக்களைத் தவிர்க்கலாம். எனவே இந்தக் கருத்தை அரசு பரிசீலித்து......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது மூலக் கேள்விக்குத் தொடர்புடையதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : துணைத் தலைவர் அவர்களே, நீண்ட தூரம் செல்லக்கூடிய பயணிகள் விரைவாக சுற்றுவழித் தடங்களில் செல்லாமல், நேராகச் செல்லக்கூடிய பேருந்துகளில் ஏறிச் செல்வதைத்தான் வழக்கமாகக் கொண்டு இருக்கிறார்கள். நம்முடைய போக்குவரத்துக் கழகங்கள் நடத்தக்கூடிய பேருந்துகள் கொஞ்சம்—1 மணி நேரம், 1½ மணி நேரம்—காலதாமதமாக—அதாவது வேகமாகச் செல்லாமல் குறைவான நேரத்தில் செல்லாமல்—செல்கிறது என்கின்ற காரணத்தினாலேகூட தனியார் பேருந்துகள் வேகமாகச் செல்கின்றன என்ற எண்ணம் பொதுமக்கள் மத்தியிலே இருக்கிறது. அப்படி இருக்கும்போது திருச்சிக்கோ, மதுரைக்கோ செல்லக்கூடிய பேருந்துகள் காஞ்சிபுரம், செய்யாறு, ஆரணி இவைகளையெல்லாம் சுற்றினால் நிச்சயமாக நீண்ட தூரம் செல்லக்கூடிய பயணிகள் அதிலே பயணம் செய்ய மாட்டார்கள்.

1991 சனவரி 24]

திரு. வீ. தமிழ்மணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து மாமல்லபுரம், கல்பாக்கம் வழியாக கோயம்புத்தூர் வரை பேருந்துகளை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் ஏற்கனவே இயக்கி வந்தது. அது கடந்த 6 மாத காலத்திற்கு முன்பாக நிறுத்தப்பட்டு விட்டது. மாமல்லபுரமும், கல்பாக்கமும் சுற்றுலாப் பயணிகளை அதிகமாகக் கவருகின்றபடியால், அவசியம் அந்தப் பேருந்தை மீண்டும் இயக்குவதற்கு அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதனால் இந்தப் பேருந்துகள் நிறுத்தப்பட்டன என்ற விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. பரிசீலிக்கலாம்.

9-20 மணி.

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடற்கரை ஓரமாகச் செல்லக்கூடிய சாலையில் சென்னையிலிருந்து இராமேஸ்வரம் வரையில் இன்னும் அதிகமானப் பேருந்துகளைத் திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழகம் இயக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள டீசல் தட்டுப்பாடு காரணமாக இருக்கின்ற பேருந்துகளையே நாம் குறைக்கக் கூடிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறோம். மக்களுடைய தேவை அதிகமாக இருப்பதை அரசு உணர்ந்து இருக்கிறது. டீசல் தட்டுப்பாடு நீங்கியதற்குப் பிறகு இந்தப் பேருந்துகளை மேலும் அதிகப்படுத்தலாம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து தென் பகுதிக்குச் செல்லக்கூடிய பேருந்துகள் அனைத்தும் திண்டிவனம் வரையில் ஒரே சாலையில் செல்லுகிற காரணத்தால், ஏராளமான விபத்துகள் ஏற்படுகின்றன. காலமும் அதன்மூலம் விரயம் ஆகிறது. ஆகவே, கும்பகோணத்திற்குக் கிழக்கே செல்லுகின்ற பேருந்துகள் அனைத்தையும் மாமல்லபுரம், மரக்காணம், பாண்டிச்சேரி வழியாக உடனடியாக விட அரசு ஆவன செய்யுமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியே இதுதான். ஏற்கனவே நான் இதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன்.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேது சமுத்திரத் திட்டத்தின்மூலமாக சேது பாதையை விரைவாகப் போடுவதற்காக ஒரு திட்டம் மத்திய அரசின் அனுமதியோடு அறிவிக்கப்பட்டு இருந்தது. அந்தத் திட்டம் எந்த அளவுக்கு அரசினுடைய குறிப்பிலே இருக்கிறது. அது செயல்படுமா, இல்லை கைவிடப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றியத் தகவல் தற்போது என்னிடத்தில் இல்லை.

கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் மூலம் தாழ்த்தப்பட்டோருக்குக் கடன்.

* 11535—திரு. கே. வி. இராமசாமி :
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் மூலம் தற்போது பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கு வழங்கப்படும் வீட்டுக் கடன் வசதிகளை தாழ்த்தப் பட்டோருக்கும் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் கிராமப்புற வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கிராமப்புறங்களில் வாழும் பொருளாதாரத்தில் நலிவுற்ற அனைத்துப் பிரிவினர்களுக்கும் ஜாதி வேறுபாடின்றி 1978—79 முதல் 1985-ஆம் ஆண்டு வரையில் வீடு கட்ட கடன் வழங்கப்பட்டு வந்தது. தற்போது அரசாணை எண். 615, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 19—6—1985-ன்படி 1985-ம் ஆண்டு முதல் கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்களுக்குக் கடன் வழங்குவது நிறுத்தப்பட்டு விட்டது. தற்போது மீண்டும் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் மூலம் ஆதி திராவிடர் களுக்கு வீடுகட்ட கடன் வழங்குவது குறித்து நடவடிக்கை மேற்கொள்வதற்கில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.